Ours bank with
Bank of Baroda


# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 267 | உள்ளூர் - 25.09.2026 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 267 | வெளியூர் - 26.09.2026 | சனிக்கிழமை | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com





**தொழிலில் உச்சம் தொடும் பிறந்த தேதிகள்!**

**ரயில்வேயில் 3,477 வேலைவாய்ப்புகள்!**

**வங்கி ஸ்டிரைக்; அரசு சம்பளம் முந்தியது! தனியாருக்கு?**

**காப்பீட்டு விற்பனையில் கட்டுப்பாடு?**

## இளைஞர்கள் தான் Viksit Bharat-ன் முதுகெலும்பு - பிரதமர் மோடி!

டெல்லி, செப் 25–

பிரதமர் நரேந்திர மோடி வத்நகரிலிருந்து வாரணாசி வரை இருசக்கர வாகனப் பயணம் மேற்கொள்ளும் சேவா யாத்ரிகர்களுடன் காணொளி வாயிலாக பேசினார். அவர்களிடம் பேசிய பிரதமர் மோடி அவர்களின் சேவை மனப்பான்மையை பாராட்டினார்.

பொதுவாக .திட்டங்கள் உருவாக்கப்படும்போது, அவை பெரும்பாலும் ஒரு வழக்கமான அரசு நடவடிக்கையாகவோ அல்லது அர சியல்வாதிகளாகிய நாங்கள் வெறும் பேச்சுக்காகக் குறிப்பிடும் விஷயமாகவோ தோன்றலாம். ஆனால், ஒரு திட்டம் உண்மையில் ஒருவரின் வாழ்க்கையை மாற்றி அமைத்து, அவர்களுக்கு ஒரு புதிய தொடக்கத்தை அளிக்கும்போது கிடைக்கும் அளப்பரிய மனநிறைவை நீங்கள் நிச்சயம் உணர்ந்திருப்பீர்கள்.

அரசுத் திட்டங்கள் என்பவை வெறும் நிதியைச் செலவிடுவது அல்லது அரசியல் ஆதாயம் தேடுவது மட்டுமல்ல; ஒரு திட்டம் சமூகத்தின் கடைக்கோடியில் உள்ள நபரையும் சென்றடையும்போது, அது அவர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையின் தொடக்கமாக அமைகிறது; அதிலிருந்து கிடைக்கும் மனநிறைவு உண்மையிலேயே அசாத்தியமானது



எண்டு குறிப்பிட்டார்.

நாம் சுயநலமற்ற சேவை மனப்பான்மையுடன் செயல்படும் போதுதான், ‘ஆயுஷ்மான் யோஜனா’ போன்ற திட்டங்கள் உருவாகின்றன. இந்த இரு நகரங்களுக்கு இடையே பயணம் செய்யும்போது, இத்தகைய சேவைப் பணிகளை நாங்கள் எவ்வாறு ஊக்குவித்துள்ளோம் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள் என்று குறிப்பிட்டார். அரசியல், தேர்தல் மற்றும் நிர்வாகம் ஆகியவற்றிற்குத் தனித்தனி இடங்கள் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக தேசத்தை சிறப்பான முறயில் கட்டமைப்பதே மிக முக்கியமான நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் பிரதமர் மோடி மேலும் கூறினார். அந்த வகையில் நாட்டை உருவாக்க உழைக்கும் மக்கள் நாம். ‘விக்சித் பாரத்’தை (வளர்ச்சியடைந்த இந்தியாவை) உருவாக்கும் உறுதியுடன் நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்வோம். இளைஞர்கள் தான் “விக்சித் பாரதத்தின்” (வளர்ச்சியடைந்த இந்தியா) முதுகெலும்பு என்றும், 2047–க்குள் வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதில் அவர்களே முக்கிய உந்துசக்தி என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

## அமித்ஷாவின் ஏஜெண்ட்தான் தலைமைத் தேர்தல் ஆணையர்: மாணிக்கம் தாகூர்!

புதுடெல்லி, செப். 25–

இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும் என தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர் தெரி வித்துள்ளார். தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் பதவி விலக வலியுறுத்தி மாணிக்கம் தாகூர் கூறியிருப்பதாவது, “இந்திய ஜனநாயகத்தின் முதுகெலும்பாக விளங்கும் முதன்முறை வாக்காளர்களான 18 வயது ஜென் ஸீ இளைஞர்களிடமிருந்து வாக்குரிமையை அப்பட்டமாகப் பறிக்கும் சதியில் அமித் ஷாவுடன் சேர்ந்து இந்திய தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் ஈடுபட்டு வந்திருப்பது இப்போது வெட்டவெளிச்சத்திற்கு வந்துள்ளது.

கடந்த 1958–ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து நடைமுறையில் இருந்துவந்த வருடாந்திர சுருக்கமுறை வாக்காளர்




பட்டியல் திருத்தப் பணியை (SSR) 2024 ஜனவரிக்குப் பிறகு முடக்கி வைத்து, லட்சக்கணக்கான புதிய தலைமுறை இளைஞர்களை வாக்காளர் பட்டியலில் இணையவிடாமல் இவர் தடுத்து நிறுத்தி வந்திருப்பது ஆதாரங்களுடன் தற்போது அம்பலமாகியுள்ளது

தேர்தல் ஆணையத்தின் நடுநிலைமை குறித்தும், நாட்டின் ஜனநாயக அமைப்புகள் ஆளும் பாஜகவின் பிடிக்குள் சிக்கிச் சீரழிக்கப்பட்டு வருவது குறித்தும் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து ராகுல் காந்தி எச்சரித்து வந்த உண்மை இப்போது ஒட்டுமொத்த நாட்டுக்கும் தெளிவாகப் புரிந்துவிட்டது

இளைஞர்களின் மாற்றத்துக்கான குரலையும், மோடி அரசின் அநீதிகளை எதிர்க்கும் இளைஞர் சக்தியையும் தேர்தல் களத்துக்கு வரவிடாமல் திட்டமிட்டுத் தடுக்கும் அற்ப அரசியலில் தலைமை ஆணையர் ஈடுபட்டு வந்தது இதன்மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

ஜனநாயகத்தின் அடித்தளத்தையே சிதைத்து, லட்சக்கணக்கான இளைஞர்களின் வாக்களிக்கும் உரிமையைப் பறிக்கும் துரோகத்தில் ஈடுபட்டு வந்த தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், இதற்கு முழுப் பொறுப்பேற்று உடனடியாகத் தனது பதவியை விட்டு வெளியேற வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

## இடைத்தேர்தல்: முதல்வர் பிரசாரம்!

சென்னை, செப். 25–

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், தவெக சார்பில் முதல்வர் விஜய் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார்.

இதற்காக ஆத்தூர் சுங்கச்சாவடி அருகே 5,000 பேர் அமரும் வகையில் பொதுக்கூட்ட மேடை அமைக்கப்பட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மதியம் 3 மணியளவில் முதல்வர் விஜய் பிரசாரத்தைத் தொடங்கும்நிலையில், பிராசாரத்தில் பொதுமக்களுக்கான அனைத்து அடிப்படைத் தேவைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

ஆத்தூர் சுங்கச்சாவடி அருகே சுமார் 50 ஏக்கர் அளவில் தவெக பொதுக்கூட்ட அரங்கு அமைக்கப்பட்டு, 5,000 பேர் அமர்வதற்கான இருக்கைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அரங்கினுள் செல்வதற்கு இரு நுழைவாயில்கள் அமைக்கப்பட்டு, உள்ளே வலது மற்றும் இடது புறங்களில் தலா 7 பிரிவுகள் என 14 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் 400 முதல் 450 பேர் வரையிலான இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரசாரத்தில் கலந்துகொள்ளும் மக்களுக்காக ஒவ்வொரு இருக்கையிலும் தண்ணீர் பாட்டில், பிஸ்கட், குளிர்பானம், நிலக்கடலை ஆகிய உணவுப்பொருள்கள் அடங்கிய




பைகள் வைக்கப்பட்டுள்ளன.

முதல்வர் விஜய்யின் பேச்சைக் கேட்கவும் காணவும் ஏதுவாக ஒவ்வொரு பிரிவிலும் எல்இடி திரைகள் வைக்கப்பட்டுள்ளன. அரங்கின் இருபுறத்திலும் குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அரங்கின் உள்ளேயும் வெளியேயும் சிசிடிவி கேமராக்களும் பொருத்தப்பட்டுள்ளன. பிரசாரத்தில் அவசர உதவிக்கான மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, மதுராந்தகத்தில் முதல்வர் விஜய்யின் பிரசாரத்தையொட்டி சுமார் 4,000 போலீசார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். கர்ப்பிணிகள், சிறுவர் – சிறுமியர், மாணவ – மாணவியர், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், உடல்நலம் குன்றியவர்கள் உள்ளிட்டவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டாம் என தவெக பொதுச் செயலரும் அமைச்சருமான என். ஆனந்த் தெரிவித்துள்ளார்.

காவல் துறை அனுமதிக்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி பிரசார நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. க்யூஆர் குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 5,000 பேர் மட்டுமே இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். மதுராந்தகம் தொகுதி தவெக வேட்பாளரை ஆதரித்து பிரசார பொதுக்கூட்டத்தில் பேச முதல்வர் விஜய் சென்னையில் இருந்து கிழக்கு கடற்கரைச் சாலை வழியாக பூஞ்சேரி, திருக்கழுகுன்றம், ஈசூர்–பூதூர், மதுராந்தகம் வழியாக அச்சிறுப்பாக்கம் அருகில் உள்ள ஆத்தூர் சுங்கச்சாவடி வந்து மைதான கூட்டரங்கை அடைகிறார்.

## கமிஷனுக்கு கடிவாளம்!

# காப்பீட்டு விற்பனையில் கட்டுப்பாடு முகவர்கள், வங்கிகளுக்கு புதிய வரம்பு

### ஐஆர்டிஏஐ வரைவு விதிகளில் பரிந்துரை!!

புதுடெல்லி, செப். 25–

காப்பீட்டு பாலிசிகளை விற்பனை செய்யும் முகவர்கள், வங்கிகள் மற்றும் விநியோக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கமிஷன், ஊக்கத்தொகைகளைக் கட்டுப்படுத்த இந்திய காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமான ஐஆர்டிஏஐ புதிய வரைவு விதிகளை வெளியிட்டுள்ளதாக குட்ரிட்டர்ன்ஸ் தமிழ் செய்தி தெரிவித்துள்ளது.



காப்பீட்டு நிறுவனங்களின் செலவுகளைக் கட்டுப்படுத்துவதுடன், பாலிசிதாரர்களுக்கு நியாயமான பலன்கள் கிடைப்பதை உறுதிப்படுத்துவதே இந்த முன்மொழிவுகளின் நோக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

**டெர்ம் பாலிசிகளுக்கு வரம்பு**

தனிநபர் டெர்ம் பாலிசிகளின் முதல் ஆண்டு கமிஷனை வங்கிகள் உள்ளிட்ட விநியோக நிறுவனங்களுக்கு அதிகபட்சம் 25 சதவீதமாகவும், தனிப்பட்ட முகவர்களுக்கு 30 சதவீதமாகவும் நிர்ணயிக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. புதுப்பிப்பு ஆண்டுகளில் முறையே 7.5 சதவீதம், 10 சதவீதம் வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.

பிற பாலிசிகளில் பிரீமியம் செலுத்தும் காலத்துக்கு ஏற்ப கமிஷன் வரம்புகள் மாறும். குறுகிய காலத்துக்கு குறைந்த வரம்பும், நீண்டகால பிரீமியம் திட்டங்களுக்கு வேறுபட்ட வரம்பும் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகச் செய்தி குறிப்பிடுகிறது. ஐந்து ஆண்டுகளுக்குள் பிரீமியம் செலுத்தும் திட்டங்களில் விநியோக நிறுவனங்களுக்கு 5 சதவீதம், முகவர்களுக்கு 6.25 சதவீதம் வரை கமிஷன் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. பத்து ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட திட்டங்களில் முறையே 20 சதவீதம், 25 சதவீதம் வரை வரம்பு குறிப்பிடப்பட்டுள்ளது. இவை அனைத்துப் பாலிசிகளுக்கும் ஒரே மாதிரியாகப் பொருந்தும் விகிதங்கள் அல்ல.

**சலுகைகளும் கணக்கில் வரும்**

நேரடி கமிஷனுடன் பயணச் சலுகைகள், சந்தைப்படுத்தல் ஆதரவு, பிராண்ட் கட்டணங்கள் உள்ளிட்ட பணம் மற்றும் பணமல்லாத ஊக்கங்களையும் ஒரே வரம்புக்குள் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

கடன் அல்லது கிரெடிட் கார்டு பெறும் வாடிக்கையாளர்களிடம் காப்பீட்டை கட்டாயமாக இணைத்து விற்பனை செய்வதையும், தவறான தகவல்களால் பாலிசி வாங்கச் செய்வதையும் தடுக்கும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

பாலிசியின் விலை, அடிப்படை அம்சங்களைப் பார்ப்பதற்கு முன்பே தனிப்பட்ட விவரங்களை வழங்குமாறு இணையதளங்கள் கட்டாயப்படுத்தும் நடைமுறையையும் கட்டுப்படுத்த முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மூலம் விவரங்களைப் பகிராமலேயே பாலிசிகளை ஒப்பிட வழிவகுக்கும்.

**இன்னும் இறுதி விதிகள் அல்ல**

வரைவு குறித்துப் பொதுமக்கள் அக்டோபர் 25 வரை கருத்துத் தெரிவிக்கலாம் எனச் செய்தி கூறுகிறது. கருத்துகள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே இறுதி விதிகள் அறிவிக்கப்படும். எனவே, கமிஷன் குறைப்பு ஏற்கெனவே அமலுக்கு வந்துவிட்டதாகக் கருதக்கூடாது. பாலிசி வாங்குவோர் விளம்பரச் சலுகைகளை மட்டும் பார்க்காமல், காப்பீட்டுத் தொகை, பிரீமியம், விலக்குகள், புதுப்பிப்பு நிபந்தனைகளைப் படித்துத் தேர்ந்தெடுப்பது அவசியம். முன்மொழியப்பட்ட கமிஷன் மாற்றத்தால் பிரீமியம் தானாகக் குறையும் என்றும் உறுதியாகக் கூற முடியாது. இறுதி அறிவிப்பில் இடம்பெறும் விதிகளே நடைமுறையைத் தீர்மானிக்கும்.

## டான்சானியாவில் இருந்து காங்கோவிற்கு சென்ற படகு கவிழ்ந்ததில் 41 பேர் உயிரிழப்பு!

டான்சானியா, செப். 25–

டங்கனிகா ஏரியில் டான்சானி யாவில் இருந்து காங்கோ சென்ற படகு கவிழ்ந்ததில், குறைந்தது 41 பேர் உயிரிழந்ததாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்தனர். அப்படகில் சுமார் 100 பயணிகளும் சரக்குகளும் இருந்ததாக டங்கனிகா மாகாணத்தின் போக்குவரத்து அமைச்சர் நோரிஸ் முலோங்கோயி கூறினார்; மேலும் 49 பேர் மீட்கப்பட்டுள்ள தாகவும், மீதமுள்ள பயணிகளை தேடும் பணி நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். “டான்சானியாவின் கிகோமா நகரில் இருந்து காங்கோவின் டங்கனிகா மாகாணத்தில் உள்ள கலெமி நகருக்கு சென்றுகொண்டிருந்த அந்த படகு,



மபேரா கிராமத்திற்கு அருகே கவிழ்ந்தது,” என்று முலோங்கோயி ‘அசோசியேட்டட் பிரஸ்’ (AP) செய்தி நிறுவனத்திடம் கூறினார்.

டங்கனிகா ஏரி உலகின் மிகப்பெரிய நன்னீர் ஏரியாகவும், பைக்கால் ஏரிக்கு அடுத்தபடியாக உலகின் இரண்டாவது ஆழமான ஏரியாகவும் விளங்குகிறது. வியாழக்கிழமை நடந்த இந்தத் துயரச் சம்பவத்திற்கான காரணம் உடனடியாக தெரியவரவில்லை; இருப்பினும், சமீபத்திய ஆண்டுகளில் காங்கோ வில் நடந்த படகு விபத்துகளில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். படகுகளில் பெரும்பாலும் அளவுக்கு அதிகமான பயணிகள் ஏற்றப்படுவதும், உயிர்காக்கும் அங்கிகள் இல்லாததும் இத்தகைய விபத்துகளுக்கு காரணமாக அமைகின்றன.

காங்கோவின் 10 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு அந்நாட்டின் ஆறுகள் ஒரு முக்கிய போக்குவரத்து வழியாக உள்ளன; குறிப்பாக, அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் குறைவாகவோ அல்லது இல்லாமலோ உள்ள தொலைதூர பகுதிகளில் ஆறுகளே போக்குவரத்திற்கு பெரிதும் பயன்படுகின்றன.

## வங்கி ஸ்டிரைக்: அரசு சம்பளம் முந்தியது; தனியாருக்கு?

புதுடெல்லி, செப். 25–

செப்டம்பர் 28 முதல் 30 வரை வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாகவும், இதையடுத்து மத்திய அரசு ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் செப்டம்பர் 25–லேயே வழங்கப்படும் என்று தெரிவிக்கிறது.

தனியார் ஊழியர்களுக்கான சம்பளத் தேதியை அந்தந்த நிறுவனங்களே தீர்மானிக்க வேண்டும் எனவும் அச்செய்தி குறிப்பிடுகிறது. இதனால் அனைவருக்கும் சம்பளம் தாம தமாகும் என்று அர்த்தமில்லை. செப்டம்பர் 27, ஞாயிற்றுக்கிழமை பொதுத்துறை மற்றும் பிராந்திய கிராம வங்கிகள் செயல்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. அவசரப் பரிவர்த்தனைகளைத் திட்டமிடும் முன், உங்கள் வங்கியின் அதிகாரப்பூர்வ அறிவிப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.



தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 25.09.2026
விசுவாவசு தமிழ் வருடம்
புரட்டாசி மாதம் 08-ம் தேதி

# எல்லைகளைக் கடந்த இசை!

**தலையங்கம் | ஆசிரியர், மதுரைமணி**



மொழியும் தேசமும் மனிதர்களைப் பிரிக்கலாம்; இசை அவர்களை இணைக்கிறது. அமெரிக்க ஜாஸ் இசை மேதை ஜான் கோல்ட்ரேனின் நூற்றாண்டு நினைவு, இந்த உண்மையை மீண்டும் உணர்த்துகிறது.

இந்தியாவுக்கு வந்திராத கோல்ட்ரேன், அதன் இசையிலும் தத்துவத்திலும் ஈர்க்கப்பட்டார். பண்டிட் ரவிசங்கரின் சிதார் இசை அவரது தேடலுக்குப் புதிய கதவுகளைத் திறந்தது. 1961–ல் உருவான அவரது ‘இந்தியா’ இசைப்படைப்பு, அந்த ஈர்ப்பின் வெளிப்பாடாக அமைந்தது. தனது மகனுக்கு ‘ரவி’ என்று பெயரிட்டதிலும் அந்த நெருக்கம் வெளிப்பட்டது.

அவரது இசை ஆன்மிகத் தேடலுடன் நின்றுவிடவில்லை. இனவெறியின் வலிக்கும் குரலானது. அமெரிக்காவில் இனவெறித் தாக்குதலில் கொல்லப்பட்ட நான்கு சிறுமிகளின் நினைவோடு தொடர்புடைய ‘அலபாமா’, துயரத்தை இசையாகப் பதிவு செய்தது. ‘ஏ லவ் சுப்ரீம்’ நம்பிக்கையைத் தேடும் பயணமாக மலர்ந்தது.

பிற மரபுகளை அணுகுவது சொந்த அடையாளத்தை இழப்பதல்ல. அவற்றிலிருந்து கற்றுக்கொண்டு தனக்கான குரலை உருவாக்க முடியும் என்பதே கோல்ட்ரேனின் கலை சொல்லும் செய்தி.

நாற்பது வயதில் அவரது வாழ்க்கை முடிந்தாலும், இசையின் தேடல் முடிந்துவிடவில்லை. பண்பாடுகளுக்கு இடையே சுவர்களை எழுப்பும் காலத்தில், கோல்ட்ரேனின் இசை நமக்குத் தேவையான பாடம்: வேற்றுமைகளை அணுகுவோம்; புதிய படைப்புகளுக்குக் கதவு திறப்போம்.

# வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம்: தமிழக அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வரவு வைப்பு!




சென்னை, செப். 25–

தமிழக அரசு ஊழியர்கள் தங்களின் சம்பளத்தை ஒவ்வொரு மாதமும் 1–ந் தேதியன்று வங்கிக் கணக்குகளில் பெற்று வருகின்றனர். ஆனால் இந்த மாத இறுதியில் வங்கி ஊழியர்கள் 3 நாள் வேலை நிறுத்த போராட்டத்தை அறிவித்துள்ளனர். அதோடு காந்தி ஜெயந்தி உள்ளிட்ட விடுமுறை நாட்களும் தொடர்ந்து வருகிறது.

இதனால் அரசு ஊழியர்களின் வங்கிக் கணக்குகளில் பணம் செலுத்துவதில் கால தாமதம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. இதை உணர்ந்து அரசு ஊழியர்களுக்கான சம்பளத்தை இன்றே (25–ந் தேதி) வழங்க வேண்டும் என்று அனைத்துத் துறை தலைவர்களுக்கும் அரசு கடிதம் அனுப்பியுள்ளது. இதுகுறித்த சுற்றறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:–

வரும் 28, 29 மற்றும் 30–ந் தேதிகளில் 3 நாட்கள் நாடு தழுவிய வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த நாட்களில் வங்கிப் பரிவர்த்தனைகளில் பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது என்று மத்திய அரசின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மத்திய அரசின் இந்த செப்டம்பர் மாதத்திற்கான சம்பளம், ஓய்வூதியம் (பாதுகாப்பு துறை, அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு உள்பட) ஆகியவற்றை 25–ந்தேதி வழங்குவதற்கு மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. அனைத்து மத்திய அரசு ஓய்வூதியதாரர்களுக்கான செப்டம்பர் மாத ஓய்வூதியமும் 25–ந் தேதியிலேயே வழங்கப்படும். இம்மாதம் 28 முதல் 30–ந்தேதி வரை உத்தேசிக்கப்பட்டுள்ள வங்கி வேலைநிறுத்தம் மற்றும் அக்டோபர் 2 முதல் 4–ந்தேதி வரை வரும் தொடர் விடுமுறை நாட்களாலும், வங்கிகளின் வழக்கமான இயக்கம் பாதிக்கப்படும்.

இவற்றை கருத்தில் கொண்டு, தமிழக அரசின் வாரியங்கள், மாநகராட்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் உள்பட அனைத்துத் துறை தலைவர்களும் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சம்பளம் வழங்கும் அலுவலர்கள் இந்த மாதத்திற்கான சம்பளம், ஓய்வூதியம் ஆகியவற்றுக்கான பில்கள், பட்டியலை தயாரித்து சம்பளத்தை 25–ந்தேதியன்று வழங்க அறிவுறுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜெம் வீரமணி பாலியல் வழக்கு: சிறப்புக்குழு!



சென்னை, செப். 25–

பிரபல தொழிலதிபர் வீரமணி மீதான பாலியல் வழக்கு நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அப்பாவி சிறுமிகளை பாலியல் வன்கொடுமை மூலம் சீரழித்த குற்றத்துக்காக வீரமணி போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். வீரமணிக்கு துணை போனதாக சாந்தி என்ற பெண்ணும், அவரது கணவர் மகேந்திர சிம்கன் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.2003–ம் ஆண்டில் இருந்து சுமார் 23 ஆண்டுகள் வீரமணியின் பாலியல் விளையாட்டுகள் தொடர்ந்து நடந்துள்ளது. வீரமணி தொடர்பான ஆபாச வீடியோக்கள் அவரது உதவியாளராக இருந்த கணேசன் என்பவரின் செல்போனில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதை தொடர்ந்து அவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இந்த விவகாரத்தில் புகார் அளித்த போது முறையாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்காத போலீஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை தொடங்கி உள்ளது. அந்தவகையில், இந்த புகார் தொடர்பாக விசாரணை நடத்தி எந்த தகவலையும் கண்டறிய முடியவில்லை என கோர்ட்டில் இறுதி அறிக்கை அளித்த விசாரணை அதிகாரிகளான விபசார தடுப்புப்பிரிவு உதவி கமிஷனராக இருந்த யாஸ்மின், இன்ஸ்பெக்டர்கள் மகேஷ்குமார், ராஜலட்சுமி ஆகியோர் மீதும், இந்த புகார் தொடர்பான விசாரணையை முறையாக மேற்பார்வையிடாத அப்போதைய சென்னை மத்திய குற்றப்பிரிவு கூடுதல் கமிஷனர் கண்ணன், போலீஸ் கமிஷனர் அருண் ஆகியோர் மீதும் நடவடிக்கை பாய்ந்தது. அருண், யாஷ்மின் ஆகியோர் கட்டாய காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டனர்.

இந்த வழக்கில் இருந்து தொழில் அதிபர் வீரமணியை காப்பாற்றுவதற் காக போலீஸ் துறையை சேர்ந்தவர்களும், அரசியல் புள்ளிகளும், இடைத்தரகர்களும் வீரமணியிடம் இருந்து ரூ.70 கோடி பணத்தை வாங்கி யதாக பரபரப்பு குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

வீரமணியின் டைரியில் அவர் யார்? யாருக்கு? எவ்வளவு பணம் கொடுத்தார் என்ற தகவல் உள்ளது. வீரமணி இதுபற்றிய அதிர்ச்சியான தகவல்களை போலீஸ் விசாரணையில் தெரிவித்துள்ளார். ‘என்னிடம் பணத்தைவாங்கி, என்னை சிறைக்கு அனுப்பிவிட்டார்களே’ என்று சிறை அதிகாரிகளிடமும் அவர் வேதனையாக கூறியுள்ளதாக கூறப்படுகிறது. இந்த வழக்கை பொறுத்தமட்டில் அடுத்தடுத்து திடுக்கிடும் தகவல்கள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, ஜெம் கிரானைட்ஸ் வீரமணிக்கு எதிரான பாலியல் வழக்கை விசாரிக்க சிறப்பு புலனாய்வுக்குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது. ஐஜி தேன்மொழி தலைமையில் சிறப்புக்குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் குழுவில் நான்கு பெண் போலீஸ் அதிகாரிகள் இடம் பெற்றுள்ளனர்.

# திமுக எம்.பி. அண்ணாதுரை வீட்டில் லஞ்ச ஒழிப்பு துறை சோதனை!






சென்னை, செப். 25–

திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதியின் திமுக எம்.பி. அண்ணாதுரை வீட்டில் லஞ்ச ஒழிப்புத் துறை சோதனை நடத்தி வருகிறது. திருவண்ணாமலை அடுத்த வேங்கிக்கால் பகுதியில் உள்ள அண்ணாதுரை வீட்டில் 20–க்கும் மேற்பட்ட லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டுள்ளனர். திமுக ஆட்சியில் வருமானத்திற்கு அதிகமாக எம்.பி அண்ணாதுரை சொத்து சேர்த்ததாக எழுந்த புகாரின் அடிப்படையில் இந்த சோதனை நடந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. திமுக ஆட்சியில் நெடுஞ்சாலைத்துறையில் ஒப்பந்தம் எடுத்து அண்ணாதுரை பல்வேறு பணிகளை செய்து வந்ததாகக் கூறப்படுகிறது.

# வீடியோ ஆதாரம் இருந்தும் 11 மாதங்கள் முடக்கம்! வழக்கை முடிக்கக் கோரிய போலீஸ் – மறுத்த நீதிமன்றம்!



அருண் கண்ணன் யாஸ்மின் ராஜலட்சுமி மகேஷ்குமார்

ஏழைச் சிறுமிகளுக்குப் பணம், செல்போன் உள்ளிட்ட உதவிகளை வழங்கி பாலியல் வன்கொடுமை செய்ததாக ஜெம் கிரானைட்ஸ் அதிபர் வீரமணி (84), உதவியாளர் சாந்தி, அவரது கணவர் மகேந்திர சிம்கன், நிறுவன ஊழியர் கணேசன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். 20 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிறுமிகளைக் குறிவைத்துச் செயல்பட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாகச் செய்தி தெரிவிக்கிறது.

வழக்கை முடிக்க முயற்சி: 2025 அக்டோபர் 6–ல் வீடியோ ஆதாரத்துடன் புகார் பெற்று, மறுநாள் வழக்குப் பதிவு செய்ததாக போலீஸார் தெரிவித்தனர். ஆனால், சுமார் 11 மாதங்கள் முன்னேற்றமில்லை. பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண முடியவில்லை என வழக்கை முடிக்கக் கோரியதை போக்சோ நீதிமன்றம் நிராகரித்து, மறுவிசாரணைக்கு உத்தரவிட்டது. வழக்கை நீர்த்துப்போகச் செய்ய முயன்றதாகவும் போலீஸார் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

2024–லேயே புகார்: காங்கிரஸ் நிர்வாகி ரஞ்சன் குமார், 2024–லேயே புகார் அளித்ததாகத் தெரிவித்துள்ளார். அப்போது சென்னை காவல் ஆணையராக இருந்த அருண், தென் சென்னை கூடுதல் ஆணையராக இருந்த கண்ணன் ஆகியோர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், இருவரும் காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளனர். உதவி ஆணையர் யாஸ்மினும் மாற்றப்பட்டுள்ளார். அருணின் பொறுப்பை ராஜிவ் குமாரும், கண்ணனின் பொறுப்பை ரம்யா பாரதியும் கூடுதலாகக் கவனிப்பார்கள்.

மூவருக்கு சம்மன்: மிரட்டல் கும்பலுடன் இணைந்து செயல்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக யாஸ்மின், ராஜலட்சுமி, மகேஷ்குமார் ஆகியோர் துறை ரீதியான விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். வீரமணிக்குச் சொந்தமான சென்னை மற்றும் சேலம் இடங்களில் சோதனைகளும் நடைபெற்றுள்ளன. சிறுமிகளின் புகைப்படங்கள், காணொளிகளைப் பகிர வேண்டாம் என்றும், வழக்கு தொடர்பான ஆதாரங்களைக் காவல் துறையிடம் ஒப்படைக்குமாறும் சென்னை காவல் ஆணையர் அமல்ராஜ் அறிவுறுத்தியுள்ளார்.

# நெடுஞ்சாலையில் இடையூறு: 10 வாகனங்கள் மீது நடவடிக்கை!







இராசிபுரம், செப்.25–

சேலம்–நாமக்கல் தேசிய நெடுஞ்சாலையில் ஆண்டகலூர் கேட் முதல் மல்லூர் வரை போக்குவரத்துக்கு இடையூறாக நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களை அதிகாரிகள் சோதனையிட்டனர். நாமக்கல் வடக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் எம். பதுவைநாதன் தலைமையில், மோட்டார் வாகன ஆய்வாளர் ஏ.செல்வகுமார் மற்றும் காவல்துறையினர் இணைந்து இச்சோதனையை மேற்கொண்டனர்.

காற்றாலை இறக்கைகளை ஏற்றிய 4 வாகனங்கள், 6 கனரக சரக்கு வாகனங்கள் என மொத்தம் 10 வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்க ப்பட்டு, இணைக்கக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டது. வாகனங்களும் உடனடியாக அப்புறப்படுத்தப்பட்டன.

ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர நெடுஞ்சாலையில் வாகனங்களை நிறுத்தக்கூடாது என ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதுபோன்ற சோதனைகள் தொடர்ந்து நடைபெறும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.



# தொழிலில் உச்சம் தொடும் பிறந்த தேதிகள்!



எண் கணிதத்தின் படி ஒரு குறிப்பிட்ட தேதிகளில் பிறந்தவர்களின் வேலை தொழில் ரீதியான செயல்பாடு எப்படி இருக்கும். அவர்கள் பெரும்பாலும் ஏன் தொழிலை தேர்ந்தெடுக்கிறார்கள்? அவருடைய ஆளுமை, தலைமைத்துவம், முடிவு எடுக்கும் திறன் போன்ற விஷயங்கள் அவர்களுடைய தொழிலை எந்த வேகத்தில் வளர்ச்சிக்கு உதவும் கூடியதாக இருக்கும். அவர்களின் சவால்களை ஏற்கும் திறன் போன்ற விஷயங்களை இங்கு தெரிந்து கொள்வோம்.

**எண் 1–ஐக் கொண்டவர்கள்**

எந்த ஒரு மாதத்திலும் 1, 10, 19 அல்லது 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் பிறப்பு எண் 1 ஆகும். எண் கணிதத்தில் இன்று எண் சூரியனுக்கு உரியதாக குறிப்பிடப்படுகிறது.



அவர்களிடம் தலைமைத்துவம் மற்றும் தன்னம்பிக்கை நிறைந்ததாக இருக்கும். எனவே இந்த 1 எண்ணில் பிறந்தவர்கள் மற்றவர்களுக்கு கீழ் பணி புரிவதை விட, தனது சொந்த திறமை, யோசனைகள், மற்றும் முயற்சிகள் மூலம் ஏதேனும் ஒரு தொழில் அல்லது வியாபாரத்தை செய்ய நினைப்பார்கள்.

தனக்கென சொந்த பாதையை வகுக்கக் கூடியவர்கள். இவர்களிடம் வலுவான தலைமைத்துவம் இருப்பதால், என்று ஒரு தொழிலை செய்தாலும் அதில் சிறந்து விளங்குவார்கள். இவர்களுக்கு ரியல் எஸ்டேட், மேலாண்மை துறையில் அல்லது நிர்வாகம் போன்ற துறைகளில் இவர்களின் இயல்புக்கு ஏற்றதாக இருக்கும்.

**எண் 3–ஐக் கொண்டவர்கள்**

எந்த ஒரு மாதத்தில் 3, 12, 21 அல்லது 30 ஆகிய ஏதேனும் ஒரு தேதிகளில் பிறந்தவர்களுக்கு அவர்களின் பிறப்பு எண் 3–ஐ அதாவது ராடிக்ஸ் எண்ணாகக் கொண்டவர்கள் எண் கணிதத்தின் குரு பகவானின் அருள் நிறைந்தவர்கள்.



இன்று எண்களில் பிறந்தவர்கள் மிகவும் புத்திசாலித்தனமான நபர்களாகவும், தங்களுடைய வாழ்க்கையில் லட்சியம் மற்றும் தொலைநோக்கு பார்வை கொண்டவர்களாக இருப்பார்கள். இதனால் எந்த ஒரு பணியை தொடங்குவதற்கு முன் சரியான திட்டமிடலுடன் செயல்படுவார்கள்.

இதனால் பெரும்பாலான விஷயங்கள் வெற்றியை சந்திப்பார்கள். இவர்களுடைய ஆளுமை திறன் பிறரிடம் வேலை செய்வதை விட தனக்கான தொழிலுள்ளது வணிகம் செய்வதில் நாட்டம் காட்டும். இவர்களுக்கு கல்வி, நிதி, ஆலோசனை வழங்குவது, பதிப்பகம் அல்லது ஏதேனும் ஒரு பயிற்சி வழங்குவது போன்ற துறைகளில் சிறப்பாக செயல்படுவார்கள். இவர்கள் தங்களுடைய கருத்துக்களை தெளிவாகவும் மற்றவர்களுக்கு புரியும் விதத்தில் எடுத்துக் கூறுவதில் வல்லவர்கள். இதனால் திட்டமிட்டு வணிகம் அவர்களுக்கு சிறந்ததாக இருக்கும்.

**எண் 5–ஐக் கொண்டவர்கள்**

எந்த ஒரு மாதத்தின் 5, 14 அல்லது 23 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் தங்களுடைய பிறப்பு எண் 5 ஆகும். இந்த எண் புதன் கிரகத்துடன் தொடர்புடையது. இவர்களிடம் புத்திசாலித்தனம், தனித்திறமைகளும் நிறைந்திருக்கும். அது மட்டும் இல்லாமல் புதிய மனிதர்களுடன் பேசுவதிலும் பழகுவதிலும் சிறந்த விளங்குவார்கள்.

மாறி வரக்கூடிய வணிகம் மற்றும் சந்தை நிலையை புரிந்து கொண்டு செயல்படுவார்கள்.



இதன் காரணமாக விற்பனை துறை, சந்தைப்படுத்துதல், மின்னணு சாதனம் வர்த்தகம், மற்றும் பிற வணிகம் சார்ந்த துறைகளில் இவர்கள் ஆர்வத்துடன் செயல்படுவார்கள். மேலும் இந்த ஒரு புதிய சூழலையும் தன்னுடைய புத்திசாலித்தனத்தால் மாற்றிக் கொள்ளக்கூடிய திறமை அவர்களிடம் இருக்கும்.

**எண் 6–ஐக் கொண்டவர்கள்**

எந்த ஒரு மாதத்தில் 6, 15 அல்லது 24–முக்கிய ஏதேனும் ஒரு தேதிகளில் பிறந்திருந்தால், அவர்களுடைய பிறப்பு எண் 6–ஆகக் கருதப்படுகிறது. எண் கணிதத்தில், இந்த எண் சுக்கிர கிரகத்துடன் தொடர்புடையதாக குறிப்பிடப்படுகிறது. சுக்கிரன் ஒருவருக்கு அழகு, சுகபோகம்,



வாழ்க்கையில் சிறந்த அழகில் உணர்வு மற்றும் படைப்புகளை தரக்கூடியவர். எனவே இவர்கள் ஃபேஷன் துறை ( ஆடை வடிவமைப்பு), அழகுக் கலை துறை, வீட்டின் உட்புற வடிவமைப்பும், உணவகங்கள் மற்றும் ஆடம்பர பொருட்கள் விற்பனை வணிகம் செய்வதில் பெரிய அளவில் பணம் ஈட்டுவார்கள்.

இந்த நபர்கள் மக்களின் விருப்பங்களை சரியான விதத்தில் புரிந்து கொண்டு அதற்கு ஏற்ப செயல்படுவார்கள். அதில் உள்ள வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்வார்கள். இவர்களுக்கு புதிய தயாரிப்புகள் மற்றும் மாறி வரும் சந்தை நிலை மற்றும் ஃபேஷன் துறையில் உள்ள மாற்றங்களை கவனித்து அதற்கான வணிகம் செய்ய கூடியவர்கள்.

**ஏன் வணிகத்தை நோக்கிச் செல்ல வேண்டும்?**

இந்த நான்கு எண்கள் பிறந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித்திறமை நிறைந்திருக்கும். அதாவது எண் 1–ல் பிறந்தவர்களிடம் தலைமைத்துவமும், எண் 3–ல் பிறந்த மரங்கள் சிறப்பாக திட்டமிட கூடியவர்கள், எண் 5–ல் பிறந்தவர்களிடம் பேச்சை மற்றும் தகவல் தொடர்பு நன்றாக இருக்கும் மற்றும் எண் 6–ல் பிறந்தவர்களிடம் படைப்பாற்றும் கலைத்திறமை அதிகம் இருக்கும்.

இது போன்ற தனித்துவமான குணங்கள், அவர்கள் வேலையை செய்வதை விட தன்னுடைய யோசனை மற்றும் திறமையான தொழில் நல்லது வணிகம் தொடர்பான விஷயங்களை ஈடுபட்டால் அவர்களின் திறமை வெளிப்படும்.

மேலும் அதில் வரக்கூடிய கடினமான சூழ்நிலையை சமாளித்து முன்னேறக் கூடிய திறனும் இவர்களுக்கு உதவியாக இருக்கும்.



தேனி மாவட்டம் ஆட்சியர் கூட்ட அரங்கத்தில் சட்டம்– ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு குறித்த ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் தலைமையில் நடந்தது. உடன் தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் கே.எஸ் பிரவீன் கௌதம் உள்ளார்.



தேனி மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் வடகிழக்கு பருமழை முன்னேற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## வெல்லம் சேர்த்தாலும்... இனிப்புக்கு அளவு தேவை!



பண்டிகை இனிப்புகளில் சர்க்கரைக்குப் பதிலாக வெல்லம் சேர்த்தால், எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம் என நினைக்கிறீர்களா? 'இயற்கையானது' என்பதால் சர்க்கரை குறைவானது என்று அர்த்தமில்லை.

வெல்லம், ஸ்டீவியா, மாங்க் ஃப்ரூட் உள்ளிட்ட இனிப்பூட்டிகள் அனைத்தும் ஒரே ஊட்டச்சத்து தன்மை கொண்டவை அல்ல. எதைப் பயன்படுத்துகிறோம் என்பதுடன், மொத்தமாக எவ்வளவு இனிப்பைச் சாப்பிடுகிறோம் என்பதிலும் கவனம் தேவை.

பண்டிகையில் இனிப்புகளை முற்றிலும் தவிர்க்க முடியாவிட்டாலும், சிறிய அளவில் பரிமாறிச் சுவைக்கலாம். மாற்று இனிப்பூட்டி சேர்த்திருப்பதை மட்டும் வைத்து அதிகமாகச் சாப்பிட வேண்டாம். இனிப்பை மாற்றுவது மட்டும் போதாது; அளவையும் கவனியுங்கள்!

# சட்டசபை தேர்தலில் திமுக - ரூ.197 கோடி, அதிமுக - ரூ.112 கோடி செலவு!



சென்னை, செப். 25–

கடந்த சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்ட தி.மு.க. –ரூ.197 கோடி, அ.தி.மு.க. ரூ.112 கோடி செலவு செய்துள்ளன. தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கான சட்டமன்ற தேர்தல் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றன. அதில் போட்டியிட்ட அரசியல் கட்சி கள், இந்திய தேர்தல் கமிஷனிடம், தேர்தல் வரவு– செலவு கணக்குகளை தாக்கல் செய்ய வேண்டும். அதன்படி தி.மு.க., அ.தி.மு.க. மற்றும் நாம் தமிழர் கட்சி ஆகியவை தங்களின் தேர்தல் செலவின பிரமாணப் பத்திரங்களை தாக்கல் செய்துள்ளன. அதன்படி தி.மு.க. ரூ.197 கோடியும், அ.தி.மு.க. ரூ.112 கோடியும் செலவு செய்துள்ளன.

தி.மு.க. தாக்கல் செய்துள்ள பிர மாணப் பத்திரத்தில், அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர். தேர்தல் தொடங்குவதற்கு முன்பாக தி.மு.க.விடம் ரூ.365 கோடி கையிருப்பு இருந்துள்ளது. தேர்தல் காலத்தில் நன்கொடைகள் மூலம் ரூ.126 கோடி வசூலாகியுள்ளது.

சட்டமன்ற தேர்தலில் தி.மு.க. மொத்தமாக ரூ.197.84 கோடியை செலவிட்டுள்ளது. பத்திரிகை, டி.வி. மற்றும் சமூக வலைத்தள விளம்பரங்க ளுக்காக ரூ.70 கோடி செலவி டப்பட்டுள்ளது. தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் மற்றும் மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவர் கமல்ஹாசன் ஆகியோரின் விமானப் பயணங்க ளுக்காக ரூ.5.90 கோடி செலவிடப்பட்டு ள்ளது. தேர்தல் பிரசாரத்துக்கு மட்டும் ரூ.149.89 கோடியை தி.மு.க. செலவு செய்துள்ளது.

இதற்காக மு.க.ஸ்டாலினுக்கு ரூ.2.66 கோடியும், கமல்ஹாசனுக்கு ரூ.3.24 கோடியும் செலவிடப்பட் டுள்ளது. மு.க.ஸ்டாலினின் மருமகன் சபரிசனின் 'பென்' நிறுவனத்துக்கு ரூ.6.61 கோடி வழங்கப்பட்டுள்ளது. கட்சி வேட்பா ளர்கள் பலருக்கு தேர்தல் நிதியாக தலா ரூ.25 லட்சத்தை தி.மு.க. வழங்கியுள்ளது. தேர்தல் செலவுகள் போக, தி.மு.க.விடம் மீதம் ரூ.319.39 கோடி இருக்கிறது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரத்தில், தமிழகம், கேரளம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களுக்கான அக்கட்சியின் மொத்த தேர்தல் செலவுத் தொகையாக ரூ.112.39 கோடி காட்டப்பட்டு உள்ளது. தேர்தலுக்கு முன்பு கட்சியின் கையிருப்பாக ரூ.313 கோடி இருந்துள்ளது. தேர்தல் காலத்தில் ரூ.87.41 கோடி வரவு வந்துள்ளது.

அ.தி.மு.க.வின் மொத்த செலவான ரூ.112 கோடியில், ரூ.103 கோடி, பிரமான்யா ஸ்ட்ராட்டஜி கன்சல்டிங் நிறுவ னத்திடம் சமூக வலைத்தள மற்றும் ஊடக விளம்பரங்களுக் காக அ.தி.மு.க. வழங்கியுள்ளது. தேர்தல் முடிந்த நிலையில் அ.தி.மு.கவின் வங்கிக் கணக்கில் ரூ.295 கோடி இருப்பு உள்ளது.

நாம் தமிழர் கட்சிக்கு தேர்தலுக்கு முன்பு கட்சியின் கணக்கில் ரூ.19 லட்சம் இருந்தது. தேர்தல் நேரத்தில் ரூ.2.20 கோடி வசூலானது. தேர்தலில் அக்கட்சி மேற்கொண்ட மொத்த செலவு ரூ.1.37 கோடியாகும். பிரசாரம் மற்றும் விளம்பரங்க ளுக்காக ரூ.93 லட்சமும், வேட்பாளர்களுக்கான செலவுக்காக ரூ.44 லட்சமும் செலவிடப்பட்டுள்ளது. வேட்பாளர்களுக்கு ரூ.20 ஆயிரம் முதல் சீமான் உள்ளிட்டோருக்கு ரூ.5 லட்சம் வரை கட்சி நிதி வழங்கியுள்ளது. தேர்தல் முடிந்தபிறகு அக்கட்சியின் வசம் ரூ.64 லட்சம் இருப்பில் உள்ளது.

# வேலை வாய்ப்பு

## ரயில்வேயில் 3,477 வேலைவாய்ப்புகள்!



ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம் (RRB), பட்டதாரி நிலையிலான தொழில்நுட்பம் சாராத பிரபலப் பிரிவு (NTPC) பணிகளில் 3,477 காலியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு விவரங்கள் வெளியாகியுள்ளன. மத்திய அரசு பணிகளில் சேர விரும்பும் பட்டதாரிகளுக்கு இது ஒரு வேலைவாய்ப்பாகும்.

**பணியிட விவரங்கள்**

நிறுவனம்: ரயில்வே ஆட்சேர்ப்பு வாரியம்

அறிவிப்பு எண்: 06/2026

பணிப் பிரிவு: NTPC — பட்டதாரி நிலை

மொத்த காலியிடங்கள்: 3,477

வேலை வகை: மத்திய அரசு வேலை

பணி நியமனம்: வழக்கமான அடிப்படையில் (Regular Basis)

பணியிடம்: இந்தியா முழுவதும்

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன் – https://www.rr–bapply.gov.in/

**முக்கிய தேதிகள்**

விண்ணப்பப் பதிவு 08.10.2026 அன்று தொடங்குகிறது. விண்ணப்பிக்கக் கடைசி நாள் 06.11.2026, இரவு 11.59 மணி.

**விண்ணப்பிப்பது எப்படி?**

விண்ணப்பதாரர்கள் ரயில்வே ஆட்சேர்ப்பு அதிகாரப்பூர்வ இணையதளத்தில் முழுமையான அறிவிப்பைப் படித்து, கல்வித்தகுதி, வயது வரம்பு, சம்பளம், தேர்வு முறை மற்றும் விண்ணப்பக் கட்டணம் உள்ளிட்ட விவரங்களை அறிந்துகொண்டு விண்ணப்பிக்க வேண்டும்.

**குறிப்பு:** இச்செய்தி வழங்கப்பட்ட விவரங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. அறிவிப்பு எண், காலியிடங்கள் மற்றும் தேதிகளை அதிகாரப்பூர்வ அறிவிப்புடன் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

# த.வெ.க. எம்.எல்.ஏ.க்கு திடீர் நெஞ்சு வலி...!



பாகூர், செப். 25–

புதுச்சேரி மணவெளி தொகுதி எம்.எல்.ஏ.வாக தமிழக வெற்றிக்கழகத்தை சேர்ந்த ராமு உள்ளார். இவர் நேற்று காலை 10 மணியளவில் தவளக்குப்பத்தில் உள்ள தனது வீட்டில் வைத்து, மண வெளி தொகுதியை சேர்ந்த 10 பயனா ளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்த நிலையில் ராமு எம்.எல்.ஏ.வுக்கு திடீரென முதுகு மற்றும் நெஞ்சு வலி ஏற்பட்டது. உடனே ராமு எம்.எல்.ஏ.வை அவரது உதவி யாளர்கள் கிருமா ம்பாக்கம் அடுத்த பிள்ளையா ர்குப்பத்தில் உள்ள மகாத்மா காந்தி மருத்து வமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு, அவருக்கு டாக்ட ர்கள் பரிசோதனை செய்த போது ரத்த குழாயில் அடைப்பு இருப்பதாகவும், உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும் தெரி வித்தனர். இதையடுத்து ராமு எம்.எல்.ஏ. தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு. ஆஞ்சியோகிராம் சிகிச்சை செய்யப்பட்டது. தொடர்ந்து அவர் தீவிர சிகிச்சை பிரிவில் டாக்டர்களின் கண்கா ணிப்பில் உள்ளார்.

# ஆசிய விளையாட்டு: இந்தியாவுக்கு இரண்டாவது தங்கம்!




புதுடெல்லி, செப். 25–

ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியாவுக்கு இரண்டா வது தங்கப் பதக்கம் வெள்ளிக்கிழமை கிடைத்துள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஜப்பானின் அய்ச்சி – நகோயா பகுதியில் செப். 19 ஆம் தேதி தொடங்கி நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை நடைபெற்ற 10 மீட்டர் ஏர் பிஸ்டல் கலப்பு அணி பிரிவில் இந்தியாவின் கமல்ஜீத் மற்றும் சுருச்சி சிங் ஆகியோர் இலக்கை நோக்கி துல்லியமாக சுட்டு, தங்கப் பதக்கத்தை வென்றுள்ளனர்.

ஆசிய விளையாட்டு வரலாற்றில் முதல்முறையாக கமல்ஜீத் – சுருச்சி இணை 484.6 புள்ளிகளைப் பெற்று புதிய சாதனையைப் படைத்துள்ளனர்.

இந்த பிரிவில், தென் கொரியா அணி வெள்ளிப் பதக்கத்தையும், ஈரான் அணி வெண்கலப் பதக்கத்தையும் வென்றன. இதுவரை எதிர்பார்த்த வெற்றியைப் பெறத் தவறியிருந்த இந்திய துப்பாக்கி சுடுதல் அணி, இறுதியாக ஒரு தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணி பெறும் இரண்டாவது தங்கம் இதுவாகும். முன்னதாக, இந்திய மகளிர் கிரிக்கெட் அணி இறுதிப் போட்டியில் வென்று தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொடுத்தது. மொத்தம் 2 தங்கம், 8 வெள்ளி, 9 வெண்கலப் பதக்கங்களுடன் புள்ளிப்பட்டியலில் இந்தியா 12–வது இடத்தில் உள்ளது. சீனா மொத்தம் 85 தங்கம் உள்பட 135 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

# யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு 0.4% கட்டணம்! அரசின் கருவூலத்துக்குச் செல்லாது: நிர்மலா சீதாராமன்!




புதுடெல்லி, செப். 25–

யுபிஐ பரிவர்த்தனைகளில் 0.4 சதவிகித நடவடிக்கையில் அரசின் கருவூலத்துக்கு எந்தத் தொகையும் வராது எனவும், இதில் அரசின் பங்கு எதுவுமில்லை என்றும் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். யுபிஐ பரிவர்த்தனை மீதான கட்டண விதிப்பு குறித்து செய்தியாளருடன் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியதாவது, யுபிஐ பரிவர்த்தனைகள் மீதான கட்டணம் குறித்து எதிர்க்கட்சிகள் முழுமையாகப் புரிந்துகொள்ளாமல் அரசுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர். இந்தக் கட்டணங்கள் வரியோ செஸ்ஸோ இல்லை என்பதை வணிகர்களும் மக்களும் நன்கு அறிந்துள்ளனர்.

யுபிஐ பரிவர்த்தனைகள் மீது அரசு எந்த கூடுதல் கட்டணத்தையும் விதிக்கவில்லை. இதிலிருந்து பெறப்படும் கட்டணம், அரசின் கருவூலத்துக்கு செல்லாது. ரூ. 2,000–க்கு அதிகமான பரிவர்த்தனைகளில் வசூலிக்கப்படும் 0.4 சதவிகித கட்டணமானது வங்கிகள், க்யூஆர் சேவை வழங்குநர்கள், பிஓஎஸ் மெஷின் வழங்குநர்கள், வணிகர்களின் வங்கிகளுக்கு பகிரப்படும். இது அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட பரஸ்பர முடிவு.

இந்தக் கட்டணமானது, வாடிக்கையாளர்கள் மீது சுமத்தப்படாது. உதாரணமாக, ரூ. 5,000–க்கு நீங்கள் ஒரு பொருள் வாங்கினால், கட்டண ரசீதில் கட்டப்பட வேண்டிய தொகையும் ஜிஎஸ்டி மட்டுமே இருக்கும்; எம்டிஆர் இருக்காது. நுகர்வோரிடமிருந்து எம்டிஆர் கட்டணத்தை வணிகர்கள் வசூலிக்க மாட்டார்கள். இந்த நடவடிக்கையில் அரசுக்கு எந்தப் பங்கும் இல்லை என்று தெரிவித்தார்.

# வாட்ஸ் அப்பில் வரும் சூப்பர் வசதி!

செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்படும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் அதிகரித்து வரும் நிலையில், குறிப்பிட்ட வீடியோ அல்லது புகைப்படம் ஏ.ஐ. மூலம் உருவாக்கப்பட்டதா அல்லது மாற்றப்பட்டதா என்பதைப் பயனர்கள் அறிந்து கொள்ள இந்த வசதி உதவும்.

வாட்ஸ் அப் சேனல்களில் பகிரப்படும் புகைப்படம் அல்லது வீடியோ செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்டதா அல்லது மாற்றப்பட்டதா என்பதை இனி எளிதாகத் தெரிந்து கொள்ள முடியும். இதற்காக 'ஏ.ஐ. கன்டென்ட் லேபிள்' என்ற புதிய வசதியை வாட்ஸ்அப் படிப்படியாக அறிமுகப்படுத்தி வருகிறது. இந்த வசதி ஆண்ட்ராய்டு சோதனைப் பதிப்பில் குறிப்பிட்ட பயனர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நிலையில், தற்போது ஐபோன் பயனர்களுக்கான சோதனைப் பதிப்பிலும் வழங்கப்படுகிறது. முதற்கட்டமாக குறிப்பிட்ட சில பயனர்களுக்கு மட்டுமே இது கிடைத்துள்ளது. இந்த வசதி கிடைத்ததும், வாட்ஸ்அப் சேனல் நிர்வாகிகள் தாங்கள் பதிவிடும் புகைப்படம், வீடியோ உள்ளிட்டவை செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்டிருந்தாலோ அல்லது மாற்றப்பட்டிருந்தாலோ அதற்கான 'ஏ.ஐ. கன்டென்ட் லேபிளை' சேர்க்கலாம். லேபிளை உறுதி செய்து சேர்த்து விட்டால், பின்னர் அதை நீக்க முடியாது எனக் கூறப்படுகிறது. அனைத்து பயனர்களுக்கும் இந்த வசதி எப்போது கிடைக்கும் என்பது குறித்து வாட்ஸ்அப் இதுவரை அதிகார ப்பூர்வமாக அறிவிக்கவில்லை. படிப்படியாக இது விரிவுபடுத்த ப்படும் என எதிர்பார்க்கப்படுகி றது. ஒருமுறை இந்த செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்க ப்படும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் அதிகரித்து வரும் நிலையில், ஒரு உள்ள டக்கம் ஏ.ஐ. மூலம் உருவாக்கப்ப ட்டதா அல்லது மாற்றப்பட்டதா என்பதைப் பயனர்கள் அறிந்து கொள்ள இந்த வசதி உதவும். சில நாடுகளில் ஏ.ஐ. மூலம் உருவாக்கப்பட்ட உள்ள டக்கங்களை அடையா ளப்படு த்துவது சட்டப்படி கட்டாயமாக இருப்பதால், அதற்கேற்ப சேனல் நிர்வாகிகளுக்கு வாட்ஸ்அப் அறிவிப்பையும் வழங்குகிறது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881


# கன்னட திரைப்படத்தில் முதல்-மந்திரியாக நடிக்கும் சித்தராமையா!



பெங்களூரு, செப். 25–

சித்தராமையாவை மீண்டும் முதல்–மந்திரியாக பார்க்கும் வாய்ப்பு அவரது ஆதரவாளர்களுக்கு கிடைத்துள்ளது. அதாவது, கன்னட திரைப்படம் ஒன்றில் சித்தராமையா முதல்–மந்திரியாக நடிக்க உள்ளார். புதுமுக இயக்குநர் ராஜேஷ் இயக்கத்தில் தயாராகும் இந்த படத்தை ஆர்.ஏ.பிலிம் பேக்டரி என்ற நிறுவனம் தயாரிக்கிறது.

இயக்குநர் கூறிய கதை பிடித்ததால் சித்தராமையா நடிக்க சம்மதித்துள்ளார். இந்த திரைப்படத்துக்கு, முக்கிய மந்திரி என்ற பெயர் சூட்டப்படலாம் என தெரிகிறது. மேலும், படப்பிடிப்பு, எடிட்டிங் உட்பட அனைத்தையும் 48 மணி நேரத்தில் முடித்து, உலக சாதனை படைக்க படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர். நவம்பர் மாதம் படப்பிடிப்பு துவங்க உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பள்ளி, கல்லூரி நாட்களில் நாடகங்களில் நடித்த அனுபவம் கொண்டவரான சித்தராமையா, 2017–ம் ஆண்டு கவிதா லங்கேஷ் இயக்கிய, 'சம்மர் ஹாலிடேஸ்' என்ற குழந்தைகள் திரைப்படத்தில், முதல்–மந்திரியாகவே நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சினிமா துளிகள்..!



### தனுஷ் 56 படப்பிடிப்பு! மாரநாடு கருப்பணசாமி கோயிலில் பூஜையுடன் தொடக்கம்!



நடிகர் தனுஷ் தற்போது ஓம் திரைப்படத்தில் நடித்து முடித்துள்ளார். இப்படம் நவம்பர் வெளியீடாகத் திரைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இதில், நடிகர் மம்மூட்டியும் நடித்துள்ளதால் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

லப்பர் பந்து இயக்குநர் தமிழரசன் பச்சமுத்து இயக்கத்தில் தனது 56–வது படத்தில் நடிகர் தனுஷ் நடிக்கவுள்ளதாக அறிவிப்பு வெளியானது. இப்படத்தில் நடிகர்கள் வடிவேலு, எஸ்.ஜே. சூரியா, பிரீத்தி முகுந்தன் உள்ளிட்டோர் நடிக்கவுள்ளனர். சாய் அபயங்கர் இசையமைக்கிறார்.

மதுரையைப் பின்னணியாகக் கொண்டு உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்பு, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள மாரநாடு கருப்பணசாமி கோயிலில் பூஜையுடன் மிகப் பிரம்மாண்டமாக இன்று காலை தொடங்கியது.

இந்த பூஜையில் பங்கேற்ற நடிகர் தனுஷ், கருப்பணசாமிக்கு 18 அடி அரிவாள் காணிக்கையாக வழங்கினார். மாரநாடு கருப்பணசாமி கோயிலில் குவிந்துள்ள ஆயிரக்கணக்கான தனுஷின் ரசிகர்கள் ஆரவாரத்துடன் அவரை வரவேற்கும் காட்சிகள் இணையத்தில் வைரலாகப் பரவி வருகின்றது.

# முறைகேடு என்று கூறிக்கொண்டே எதிர்க்கட்சிகள் தேர்தல்களில் போட்டியிடுவது ஏன்? அபிஜித் தீப்கே கேள்வி!



புதுடெல்லி, செப். 25–

கரப்பான்பூச்சி ஜனதா கட்சித் தலைவர் அபிஜித் தீப்கே, இந்த முறை கேடான தேர்தல்களை எதிர்க்கட்சிகள் புறக்கணிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "எதிர்க்கட்சிகளுக்கு:

இந்தியாவில் தேர்தல்கள் முறைகேடாக நடத்தப்படுகின்றன. ஆனால், முறைகேடுகள் நிறைந்த இந்த தேர்தல்களில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து பங்கேற்பதன் மூலம் அந்த தேர்தல்களுக்கு நீங்கள் அங்கீகாரம் அளிக்கிறீர்கள். அத்துடன் அவை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடைபெறுவது போன்ற ஒரு மாயையைத் தக்கவைக்கவும் உதவுகிறீர்கள்.

ஒருவேளை, தேர்தலில் போட்டியிடா விட்டால் தாங்கள் அரசியலில் இல்லாமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் நீங்கள் (எதிர்க்கட்சிகள்) தொடர்ந்து போட்டியிடலாம்.

ஆனால், வாக்குகள் திருட ப்படும்போது, உங்களுடைய சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்கள் பக்கம் இழுக்கப்படும்போது, உங்கள் கட்சிகள் பிளவுபடுத்தப்படு ம்போது, நீங்கள் எதைப் பாதுகாக்க முயற்சிக்கிறீர்கள்?

இது அரசியல் பிழைப்புக்கான முயற்சி அல்ல. உங்களை பலவீனப்படுத்தவோ, உங்கள் கட்சியைப் பிளவுபடுத்த, உங்களுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைத் தன்வசப்படுத்தக்கூடிய ஒரு அமைப்பில், நீங்கள் உயிர்வாழ மட்டுமே முயற்சிக்கிறீர்கள். இப்படி எவ்வளவு காலத்திற்கு உங்களால் தாக்குப்பிடிக்க முடியும்?

உங்களுக்குத் தேவையான மாநிலங்களில் தேர்தல் முறைகேடு நடக்கும்போது மட்டும் அதைப் பற்றிப் பேசிவிட்டு, மற்ற இடங்களில் நடக்கும்போது மௌனமாக இருக்கிறீர்கள். தேர்தல் முறைகேடு என்பது எந்த மாநிலத்தில் அல்லது எந்தக் கட்சி பாதிக்கப்படுகிறது என்றில்லாமல் ஒரு முக்கியப் பிரச்னை யாக அனைத்துக் கட்சியினரும் நினைக்க வேண்டும். விளையாட்டு முறைகேடாக நடத்தப்படுகிறது என்று சொல்லிக்கொண்டே, அதே விளையாட்டைத் தொடர்ந்து நீங்கள் விளையாட முடியாது. தேர்தல்களில் உங்கள் பங்கேற்பு மட்டுமே இத்தகைய முறைகேடான தேர்தல்களுக்கு அங்கீகாரம் அளிக்கிறது.

உங்கள் சொந்த அரசியல் இருப்பைப் பற்றிக் சிந்திப்பதற்கு முன், நாட்டையும் ஜனநாயகத்தையும் பற்றி சிந்தியுங்கள். ஒரு உறுதியான நிலைப்பாட்டை எடுங்கள்; முறைகேடுகள் நிறைந்த தேர்தல்களில் பங்கேற்பதை நிறுத்துங்கள்" என்று பதிவிட்டுள்ளார்.




# இன்றைய கார்ட்டூன்




## காலை உணவுத் திட்டம்: ஆசிரியர்கள் ருசித்து பார்த்த பிறகே மாணவர்களுக்கு பரிமாற வேண்டும் - பள்ளிக்கல்வித்துறை உத்தரவு!

சென்னை, செப். 25–

காலை உணவை ஆசிரியர்களே ருசித்து பார்த்த பிறகே மாணவர்களுக்கு பரிமாற வேண்டும் என பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாட்டில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் ஊட்டச்சத்து தேவையைப் பூர்த்தி செய்வதோடு, கல்விச் செயல்பாட்டையும் மேம்படுத்தும் நோக்கில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இத்திட்டம் முதலில் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில், தற்போது ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த விரிவாக்க சூழலில் உணவின் தரம் மற்றும் உடல்நலப் பாதுகாப்பில் எவ்வித சமரசமும் இருக்கக்கூடாது என்பதை



வலியுறுத்திப் பள்ளிக்கல்வித்துறை அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

திட்டத்தின் முக்கிய அம்சமாக, சமைக்கப்பட்ட காலை உணவை மாணவர்களுக்கு வழங்குவதற்கு முன்பாக ஆசிரியர்கள் அதை ருசித்து தரத்தை உறுதி செய்ய வேண்டும். உணவு சரியான வெப்ப நிலையில், சுவையாகவும், ஊட்டச்சத்து மிகுந்ததாகவும் இருப்பதை ஆசிரியர்கள் நேரடியாக சரிபார்த்த பின்னரே மாணவர்களுக்கு பரிமாற வேண்டும். இதன் மூலம் எதிர்பாராத விபரீதங்கள் தடுக்கப்படும். உணவுத் தரத்தில் எந்தவித சமரசமும் அனுமதிக்கப்படாது என்பதை பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது.

## சற்றே உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, செப். 25–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.1,12,080–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ரூ.14,010–க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.250–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## கரூர் அப்போலா மருத்துவமனை சார்பில் ஊட்டச்சத்து திருவிழா 2026

கரூர், செப்.25–

ஊட்டச்சத்து விழிப்புணர்வு, நோய் தடுப்பு மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வலியுறுத்தி, கரூர் அப்போலோ மருத்துவமனையில் செப்டம்பர் 24, 25 தேதிகளில் 'ஊட்டச்சத்து திருவிழா2026' நடைபெற்றது.

'சரியான உணவைத் தேர்ந்தெடுத்து, சிறப்பாக வாழ்வோம்' என்ற கருப்பொருளிலான விழாவை, அன்னை மகளிர் கல்லூரி மற்றும் அர்பிந்தோ நர்சிங் கல்லூரித் தலைவர் ஏ.ஆர். மலையப்பசாமி தொடங்கிவைத்தார். நோயாளிகள், குடும்பத்தினர், பள்ளி கல்லூரி மாணவர்கள், நிறுவன ஊழியர்கள், சுகாதார நிபுணர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.




சமச்சீர் உணவுத் தட்டு, உணவில் மறைந்துள்ள உப்புசர்க்கரை, அதிக உப்பின் ஆபத்துகள், பானங்களின் தன்மை, பாரம்பரிய உணவுகள், மூளை ஆரோக்கியத்திற்கான உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்த தவறான நம்பிக்கைகள் தொடர்பான கண்காட்சிகள் இடம்பெற்றன.

சர்க்கரை நோய், உடல் பருமன், இதயநலம், குழந்தைகளின் ஊட்டச்சத்து குறித்து மருத்துவ நிபுணர்கள் விளக்கினர். உணவுப் பழக்கம், உடல் எடை மேலாண்மை மற்றும் நோய் தடுப்பு தொடர்பாகப் பங்கேற்பாளர்களுக்கு நேரடி ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. "ஊட்டச்சத்து அறிவுக்கும் அன்றாட நடைமுறைக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதே நோக்கம். விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மூலம் சமூக ஆரோக்கியத்தை மேம்படுத்தத் தொடர்ந்து செயல்படுவோம்'' என மருத்துவமனையைச் சேர்ந்த கற்பகவள்ளி தெரிவித்தார்.

போஸ்டர் தயாரிப்பு, விழிப்புணர்வு வாசகம் எழுதுதல், நெருப்பில்லா சமையல் போட்டிகளும் நடைபெற்றன. பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்களும், சிறந்த படைப்புகளுக்குப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

## வீரமணி வழக்கு: அரசியல் சர்ச்சையும்.. திரையுலக மௌனமும்..!

சென்னை, செப். 25–

சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைக் குற்றச்சாட்டில், ஜெம் கிரானைட்ஸ் நிறுவன உரிமையாளர் வீரமணி, 85, போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. குற்றம் நிரூபிக்கப்படுவோருக்குக் கடும் தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

**புகார் கிடப்பில் போடப்பட்டதா?**

கடந்த 2024 நவம்பரிலேயே ஆதாரங்களுடன் புகார் அளித்தும் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என காங்கிரஸ் நிர்வாகி ரஞ்சன் குமார் குற்றம்சாட்டியுள்ளார். அப்போதைய திமுக ஆட்சியில் புகார் கையாளப்பட்ட விதம் குறித்து இந்தக் குற்றச்சாட்டு கேள்விகளை எழுப்புகிறது.

வீரமணியைக் காப்பாற்றப் பணம் பெற்றுக்கொண்டு முயற்சி நடந்ததாகத் தவெக அமைச்சர்கள் குற்றம்சாட்டி வருவதாகவும் வழங்கப்பட்ட செய்தி குறிப்பிடுகிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்ட முடிவுகள் அல்ல; ஆதாரப்பூர்வமான விசாரணை தேவை.

வீரமணிக்கும், அவருக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கும், காப்பாற்ற முயன்றவர்களுக்கும் பதவி வேறுபாடின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என திமுக தலைவர் ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**திரையுலகினர் மீது விமர்சனம்:**

பிற அரசியல் விவகாரங்களில் கருத்துத் தெரிவிக்கும் பிரகாஷ் ராஜ், விஜய் சேதுபதி, சத்யராஜ், வெற்றிமாறன், அமீர், பா.ரஞ்சித், மாரி செல்வராஜ், சூர்யா, ஜோதிகா, விஷால் மற்றும் செயற்பாட்டாளர் திருமுருகன் காந்தி ஆகியோர் இவ்விவகாரத்தில் கருத்துத் தெரிவிக்கவில்லை என மூலச் செய்தி விமர்சிக்கிறது.

எனினும், அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனரா என்பது தனியாக உறுதிப்படுத்தப்படவில்லை. கருத்துத் தெரிவிக்காததை மட்டும் வைத்து அரசியல் சார்பு அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஆதரவு என முடிவுசெய்ய முடியாது. புகார் மீதான நடவடிக்கை தாமதமானதா, தலையீடுகள் இருந்தனவா என்பதைக் கண்டறிவதுடன், பாதிக்கப்பட்ட சிறுமிகளின் பாதுகாப்பையும் தனியுரிமையையும் உறுதிசெய்வதே விசாரணையின் முன்னுரிமையாக இருக்க வேண்டும்.

## பள்ளிக்குள் புகுந்து மாணவிக்கு பாலியல் தொல்லை!

சென்னை, செப். 25–

வண்டலூர் அருகே அரசுப் பள்ளியில் 10 –ம் வகுப்பு மாணவிக்கு நேர்ந்த கொடூரம் தொடர்பாக பள்ளி முன்பாக பெற்றோர்கள் சாலை மறியல் போராட்டம்

செங்கல்பட்டு மாவட்டம் வண்டலூர் அடுத்த கண்டிகையில் உள்ள அரசுப் பள்ளியில் மர்ம நபர்கள் சிலர் பள்ளிக்குள் புகுந்து 10 ஆம் வகுப்பு மாணவி ஒருவருக்கு கூட்டு பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் எழுந்துள்ளது. பள்ளியின் சுற்றுச்சுவர் வழியாக எகிறி குதித்த ஒரு கும்பல், மாணவிக்கு கைக்குட்டை மூலமாக மயக்க மருந்து கொடுத்து பாலியல் தொல்லை கொடுத்ததாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மாணவியின் பெற்றோர் புகார் தெரிவித்தும் பள்ளி தரப்பில் அலட்சியமாக செயல்படுவதாகக் கூறப்படுகிறது.



பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் பள்ளியின் முன்பாக போராட்டம் நடத்திய நிலையில் தொடர்ந்து வண்டலூர் – கேளம்பாக்கம் சாலையில் 200–க்கும் மேற்பட்டோர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காவல்துறையினர் வந்து அவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர். முதல்வர் விஜய் மதுராந்தகத்தில் பிரசாரம் செய்யவுள்ள நிலையில், இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## மேயர் பிரியாவுடன் விசிக கவுன்சிலர்கள் வாக்குவாதம்! சென்னை மாநகராட்சி கூட்டத்தில் பரபரப்பு!

சென்னை, செப். 25–

சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டம் இன்று மேயர் பிரியா தலைமையில் நடைபெற்று வருகிறது.



அப்போது, மாமன்றத்தில் அம்பேத்கரின் புகைப்படத்தை வேறு இடத்திற்கு மாற்றியதாக விசிக கவுன்சிலர்கள் மேயருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். உடனே திமுக கவுன்சிலர்களும் எழுந்து விசிக கவுன்சிலர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது.

'அம்பேத்கரை நாங்கள் யாரும் ஒதுக்கவில்லை. அம்பேத்கரை யாரும் உரிமை கொண்டாட முடியாது. அம்பேத்கர் அனைவருக்குமானவர். அவரின் கொள்கைகளைக் கொண்டு திட்டங்களை கொண்டுவந்தது திமுக' என்று கூறினார்.

இறுதியாக விசிக கவுன்சிலர்கள், அம்பேத்கரின் புகைப்படத்தை வேறு இடத்திற்கு மாற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

மேயர் இருக்கைக்குப் பின்னால் காந்தி புகைப்படமும் அதன் வலதுபுறம் முன்னாள் முதல்வர் ஸ்டாலின் புகைப்படமும், அதன் இடதுபுறம் அம்பேத்கர் புகைப்படமும் இருந்துள்ளது. தற்போது அம்பேத்கர் புகைப்படத்தை எடுத்துவிட்டு அந்த இடத்தில் முதல்வர் விஜய்யின் புகைப்படத்தை வைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. அம்பேத்கர் படத்தை அவையில் ஒரு மூலைக்கு மாற்றிவிட்டதாக விசிகவினர் புகார் தெரிவித்து வெளிநடப்பு செய்தனர்.

## பக்தர்களே... இறைவன் தேடுவது பொன்னையா? தூய உள்ளத்தையா?

காலங்களும் பக்தர்களும் மாறியிருக்கிறார்கள். பக்தி பெருகியிருக்கிறது. எளிமை விலகி பிரம்மாண்டங்கள் புகுந்திருக்கிறது. கடையேழு வள்ளல்கள் எல்லாம் இன்றைய கொடையாளர்களை ஒப்பிட்டால் ஒன்றுமே இல்லை. பணப்புழக்கம் கூடியிருக்கிறது. இது உண்மையா? என்றால் பாதி உண்மையே. எப்பொழுதுமே "பாதி உண்மையும் பாதி பொய்யும் ஆபத்தானதே''. பக்தி பெருகியிருக்கிறதே தவிர ஆன்மீகம் வளர்ந்து இருக்கிறதா ?என்றால் இல்லை.



உதாரணமாக எல்லா வழிபாட்டுத் தலங்களிலும் கூட்டம். இறைவழிபாட்டின் அடிப்படையே அதன் சித்தாந்தங்களில் உள்ள எளிமையே. புராணங்கள் முதல் ஆன்மீக பெரியோர்கள் வரலாற்றுப்படி இறைவன் எளியவர்களுக்கே காட்சி தந்து, உண்மைக்கே உற்ற துனையாய் இருந்திருக்கிறார்.

**குடமுழுக்கு :–**

அரசர்கள் காலம் முதல் உண்மை பக்தர்கள் இறைவனுக்கு விலை உயர்ந்த அணிகலன்கள் அணிவித்து அழகு பார்த்தனர். தங்கள் வாழ்வை பொது வெளியில் எளிமையாக வைத்துக் கொண்டனர். தங்களின் தேவைக்கு மட்டுமே வசதிகளை செய்து கொண்டனர். படாடோபத்தையும் விளம்பரத்தையும் தவிர்த்தனர்.

பணம், அதிகாரம், கூட்டம் இந்த மூன்றையும் ஒரு சாமானியன் அடையும் பொழுது தன்னையறியாமல் ஒரு சாத்வீக அகங்காரம் வரத்தான் செய்யும். ஆனால் அதை ஆன்மீக அனுபவம் தான் பக்குவப்படுத்தும். அது தான் பாரதீய இறை பக்தியின் தத்துவமும் அடிநாதமும்.

இறைவனின் குடமுழுக்கில் சடங்குகளில் சடங்குகளை செய்யக்கூடிய ஆச்சார்யர்களிடத்தில் எளிமையும் பக்தியும் அருகி படாடோபங்கள் வளர்ந்து விட்டது. இதற்கு அடிப்படை காரணம் மீடியாவின் வளர்ச்சி தான். தேவைகளுக்காக மட்டுமே வாழக்கூடிய இறை பணியாளர்களுக்கும் புறத்தாக்கம் அதிகமாகிவிட்டது. கலியுகத்தில் உலகம் மாறும் பொழுது இவர்கள் மட்டும் விதிவிலக்கு இல்லையே. "உலகோடு ஒட்டி ஒழுகுதல்'' என்பது இது தான் போல.

யாக சாலைகள் அதிகபட்சமாக பிரதான தெய்வங்களுக்கு ஒன்பது குண்டம், ஐந்து குண்டம், ஒரு குண்டம் என்பதே பொதுவானவிதி. ஆனால் இந்த உத்தம பக்ஷ எனும் 33 குண்டங்கள் மிக அரிதே. ஆனால் இன்று நவீன உலகில் சர்வ சாதாரணம். இதன் நோக்கம் ஒரே நேரத்தில் அதிக அளவில் மந்திர ஆஹுதிகளும் ஹோம திரவியங்களும் யாக நெருப்பின் மூலம் இறைவனுக்கு அளித்து தெய்வத்தன்மையை கூட்டி அதன் மூலம் பக்தர்களுக்கு தெய்வ அருளாசி கிடைக்கவும் மறுபுறம் சடங்குகளின் மூலம் ஒரு உயர்நத சித்தாந்தத்தை உணர வைக்க ஏற்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு திசையில் உள்ள குண்டமும்அதன் வடிவமும் ஒவ்வொரு பலனை கொடுக்க வேண்டி அமைக்கப்பட்டது. இதன் பொருள் பக்தர்களுக்கும் தெரியாது அதை செய்பவரும் அறியாது ஒரு கண்மூடித்தனமான பக்தி வளர்ந்து இருப்பதை மறுக்கவே முடியாது. இதைநடத்தக்கூடிய ஆச்சார்ய பெருமக்கள் புராண கதைகளைமட்டும் கூறாமல் அதன் உண்மையான நோக்கத்தை பக்தர்களுக்கு புரியும் விதத்தில் எடுத்துக் கூறவேண்டும். இந்த மாதிரி பெரிய வேள்விச்சாலைகளை அமைத்து அதில் பெரிய, அதிக அளவு மனித சக்தியை (man power consultancy) யை பயன்படுத்தி சடங்குகளை நடத்துவதற்கு பதிலாக உள்ளூர் ஆச்சார்யர்களை தேவைக்கு பயன்படுத்தி யாகசாலை, சடங்குகளில் உள்ள படாடோபத்தை குறைத்து உண்மையான எளிமையான பூஜை களின் மூலமாக தெய்வ சாந்நித்யத்தை கூட்ட முயற்சி செய்தாலே நலம்.

முந்தைய காலத்து புகைப்படங்களில் யாக சாலைகளும் பூஜகர்களும் எளிமையாகவே இருந்தார்கள். அவர்களில் உள்ள ஓரிரு செல்வந்தர்களும் எளிமையாகவே இருந்தார்கள் என்பதை அந்த கால புகைப்படங்களை பார்க்கும் போது இன்று உணர முடிகிறது. யாக குண்டத்திலும் விமானங்களில் ஏறி பூஜை செய்வதை அதற்கு உரிய காப்புக்கட்டிய ஆச்சார்ய, சாதக, மற்றும் ஒரு உதவியாளர் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். மடாதிபதிகள், சன்யாசிகள் கூட விமானத்தின் கீழே உள்ள படிக்கட்டுகளிலும் தான் நின்று கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இன்று மல்டி மீடியாவின் தாக்கம் அர்ச்சகர்கள், கொடையாளர்கள், அரசியல்வாதிகள், முக்கிய பிரமுகர்கள் வரை யாரையும் விடவில்லை.

ஒரு வசனம் எனது சகோதரர் அடிக்கடி கூறுவார். "ஆசைப்படக்கூடாது என்று புத்தர் ஆசைப்பட்டார்'' என்று. இதையே, சமஸ்கிருத பழமொழி "ஆசா துக்கஸய காரணம்'' என்று. இரண்டும் ஒரே அர்த்தை தான் கூறுகிறது. எளிமையும் உண்மையும் நேர்மையும் தான் இறைவன் என்பதை கூறுவதே ஆனமீகத்தின் உயரிய நோக்கம். அதை என்று உணர்கிறார்களோ அன்று தான் இதன் உண்மையான பயன் பக்தர்களை சென்றடையும். அதனால் தான் "சாந்தி பஞ்சகம்'' எனும் உபநிஷத் மந்திரத்தில் "ஓம் ஸஹ நாவவது, ஸஹநௌபுனக்து, ஸஹ வீர்யம் கரவாவஹை, தேஜஸ்வின் வதீதமஸ்து, மாவித்விஷாவஹை'' ஓம் சாந்தி சாந்தி சாந்தி: என்ற வரிகளின் அர்த்தம் பிரபஞ்சத்தின் முதற்பொருளாகிய இறைவன் ஆசிரியர் மாணவர் நம் இருவரையும் ஒன்றாகப் பாதுகாக்கட்டும், நம் இருவரையும் (அறிவாலும் ஞானத்தாலும்) ஒன்றாக போஷித்து வளர்க்கட்டும், நாம் இருவரும் இனைந்து ஆற்றல் மிக்க காரியங்களை செய்வோமாக,, நாம் கற்ற கல்வி ஒளியுடையதாயும் பிரகாசமிக்கதாகவும் விளங்கட்டும், இப்படிப்பட்ட நமக்குள் பொறாமையோ வெறுப்போ அல்லது பகைமையோ ஏற்படாமல் இருக்கட்டும், உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்று நிலைகளிலும் அமைதி நிலவட்டும் என்று கூறுகிறது.

இப்படிப்பட்ட நல்லதையே குருவானவர் சிஷ்யர்களுக்கு உபதேசித்து அதன்படி நடக்க வேண்டும் அதற்கு சிஷ்யர்களும் ஒத்துழைத்து அதையே பின்பற்ற வேண்டும் என்று அறிவுருத்துகிறது. குரு சிஷ்ய பக்தியும் கல்வியின் நோக்கமும் அதுவாகவே இருக்க வேண்டும். "கற்க கசடற கற்பவை கற்றபின்'' "நிற்க அதற்கு தக'' என்ற திருக்குறளின் வரிகள் தான் மேற்கோள்.

நன்றி

இப்படிக்கு

**ஆதிசைவன் எஸ். சங்கரன்.**

வழக்கறிஞர்.

மதுரை.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020